1969 ஆகஸ்ட் 19]

செங்கற்பட்டு மாவட்டத்தில் அரிசி விலை

*** 34 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் 1968 செப்டம்பர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் அரிசி விலை மிகவும் உயர்ந்ததை கட்டுப் படுத்த சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரிசியின் விலையேற்றத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த செங்கற்பட்டு மாவட்டத்தில், சென்னை நகர் சார்புப் பகுதிகள் நீங்கலாக ஏனைய இடங்களில் 295 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு, அரிசி, கோதுமை முதலியவை அவ்வப்போது அடையாள அட்டையின் அடிப்படையில் வழங்கப் பட்டுவருகின்றன. இம் மாவட்டத்திலுள்ள சென்னை நகர் சார்புப் பகுதிகளான 49 கிராமங்களில் குடும்பக்கார்டு முறை அமலிலுள்ளது. அங்கு நபர் ஒன்றுக்கு வாரம் 1,000 கிராம் அரிசி வழங்கப்படுகிறது. கோதுமையும் தேவையான அளவு வழங்கப் படுகிறது. அச்சார்புப் பகுதிகளில் 269 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. செப்டம்பர் முதல் டிசம்பர் வரையில் இம் மாவட்டத்திலுள்ள மக்களுக்கு ஓரளவுக்கு தொடர்ந்து அரிசி வழங்கும் பொருட்டு தென் ஆற்காடு மாவட்டத்திலிருந்து 20 ஆயிரம் டன் அரிசியும், தஞ்சை மாவட்டத்திலிருந்து 5,000 டன் அரிசி ஆகக்கூடிய நெல்லும் ஒதுக்கப்பட்டன. இதைத்தவிர, இம் மாவட்டத்திலிருந்து வெளியிடங்களுக்கு கள்ளத்தனமாக அரிசி கடத்தலைத் தடுக்க, தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, இந்தக் கட்டுப்பாடுகளை நீக்கியபிறகும், ஏற்கெனவே கொடுத்துக் கொண்டிருந்த அரிசி தொடர்ந்து மக்களுக்குக் கொடுக்கப் படுகிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தொடர்ந்து கொடுக்கப் பட்டு வருகிறது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, செங்கற் பட்டு மாவட்டத்தில் கொடுக்கப்படுகிற அரிசியைப்போல, அதை யடுத்துள்ள திண்டிவனம், செஞ்சி பகுதிகளிலும் கொடுக்க அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசாங்கம் எற்கெனவே ஏற்றுக் கொண்டிருக்கிற இடங்களில் கொடுப்பதற்குத் தடை இல்லை. மேற்கொண்டு இந்தத் திட்டத்தை விரிவாக்க இடமில்லை யென்று நேற்றையதினமே நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. விநயகம்: தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் குறிப்பாக இந்த மூன்று மாதங்களில் விலை

ஏறியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கருதுகிறார். ஏறிய விலை இன்னும் அதிகமாக ஏறிக்கொண்டே இருக்கிறதென்பது அவருக்குத் தெரியுமா ? ஏதோ கொஞ்சம் கோதுமை, மைலோ வந்தது என்றால் விலை இறங்கிவிடுமா ? இப்போது படி அரிசி 3½ ரூபாய்க்கு திருத்தணியில் விற்பது ஐயா அவர்களுக்குத் தெரியுமா ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, திருத்தணியில் படி அரிசி 3½ ரூபாய்க்கு விற்கிறது என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அரசாங்க அதிகாரிகளிடமிருந்து எங்களுக்கு வருகின்ற தகவல்களை வைத்துக்கொண்டு தான் நாங்கள் சொல்ல வேண்டும். செங்கற்பட்டு மாவட்டம் உபரி மாவட்டமாகும். இப்பொழுது பருவமழை இல்லாததால் சரியான அறுவடை இல்லை. இதனால் விலை சற்று ஏறியிருக்கிறது. அதற்காகத்தான் குடும்பக் கார்டு வழங்கப்பட்டிருக்கிறது.

பழநி நகரில் டோப்பா தொழிற்சாலை

* 35 வினா.—**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பழநி நகரில் டோப்பா தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கு. கிருணஷ்மூர்த்தி : தலைவர் அவர்களே, டோப்பா தொழிற்சாலை எந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது ? (விடை இல்லை)

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள உய்யக்கொண்டான் கால்வாய்

* 27 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள உய்யக்கொண்டான் பாசனக் கால்வாயைத் திருத்தியமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம் ஐயா பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போதிலிருந்து தொடங்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர்களின் குறிப்பு கிடைத்த பிறகுதான், வேலை தொடங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS